**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC .17/2019 <br> Sessions : <br> Deposition of Witness for : LW-13/PW- 11 <br> Name : லதா (தலைமை காவலர் ) <br> Father's/Husband's Name : <br> Nationality : Indian | Village: <br> Age :53 <br> Taluk : <br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 06.11.2024**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமைக் காவலர் திருமதி. டென்னிசாமேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இருந்தார்.**

**முதல் விசாரணை**:

நான் தமிழ்நாடு காவல்துறையில் தலைமை காவலராக பணிபுரிந்து உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் பணியை ராஜினாமா செய்துவிட்டு தற்போது சூரியனார்கோவிலில் வசித்து வருகிறேன். நான் கடந்த 31.05.2007 ம் தேதி காலை 8 மணியளவில் மேற்படி வழக்கில் பாதிக்கப்பட்ட மங்கையர்கரசி என்ற பெண்ணை உதவி ஆய்வாளரின் உத்தரவுப்படி

கும்பகோணம் 2 வது மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி உத்தரவு பெற்று 01.06.2007 ம் தேதி கும்பகோணம் அரசு மருத்துவ அதிகாரியிடம் ஆஜர் படுத்தி மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தினேன். பின்னர் 02.06.2007 ம் தேதி சிறுநீர் பரிசோதனைக்காக தனியார் மருத்துவமனையில் ஆஜர் படுத்தினேன். 04.06.2007 ம் தேதி வயது சான்று பெறுவதற்காக நீதிமன்றத்தில் இருந்து தபாலை பெற்று தஞ்சாவூர் ராஜா மிராசுதாரர் மருத்துவமனையில் ஆஜர் படுத்தி மருத்துவ அதிகாரியின் கருத்துரை நேரடியாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்ற தகவலை பெற்று நிலையம் ஆஜராகி அறிக்கை செய்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி ஆஜரில் இருந்தார். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC .17/2019 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-12/PW- 10 | Village: | |
| Name | : ரவிச்சந்திரன் | Age | :62 |
| Father's/Husband's Name | : ராதாகிருஷ்ணன் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 06.11.2024**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமைக் காவலர் திருமதி. டென்னிசாமேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இருந்தார்.**

**முதல் விசாரணை**:

நான் தமிழ்நாடு காவல்துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது மங்கம்மாள்புரத்தில் வசித்து வருகிறேன். நான் கடந்த 29.05.2007 ம் தேதி காலை 8 மணியளவில் திருப்பனந்தாள் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது நிலைய குற்ற எண் 98/2007 சட்டப்பிரிவுகள் 417, 493, 506(1) இதச வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரி செல்லப்பன் என்பவரை உதவி ஆய்வாளரின் உத்தரவுப்படி கும்பகோணம் 2 வது மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில்

ஆஜர் படுத்தி உத்தரவு பெற்று கும்பகோணம் அரசு மருத்துவ அதிகாரியிடம் ஆஜர் படுத்தி மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தினேன். பின்னர் வயது சான்று பெறுவதற்காக நீதிமன்றத்தில் இருந்து தபாலை பெற்று எதிரியை தஞ்சாவூர் ராஜா மிராசுதாரர் மருத்துவமனையில் ஆஜர் படுத்தி மருத்துவ அதிகாரியின் கருத்துரை நேரடியாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்ற தகவலை பெற்று நிலையம் ஆஜராகி அறிக்கை செய்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி ஆஜரில் இருந்தார். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC .17/2019 <br> Sessions : <br> Deposition of Witness for : LW-3/PW- 9 <br> Name : பன்னீர்செல்வம் <br> Father's/Husband's Name : சின்னபிள்ளை <br> Nationality : Indian | Village: <br> Age :47 <br> Taluk : <br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 06.11.2024**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமைக் காவலர் திருமதி. டென்னிசாமேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இருந்தார்.**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது திருமாந்துறை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது திருப்பூரில் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். சுமார் 10 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் நான் திருப்பூரிலிருந்து ஊருக்கு வந்துவிட்டு திருப்பூர் செல்வதற்காக இரவு 8 மணியளவில் கிளம்பி கொண்டிருந்தேன். அப்போது ஊரிலுள்ள நாட்டாமைகள் கூட்டமாக பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது என்னிடம் ஒரு கையொப்பம் போடுமாறு கேட்டார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி ஆஜரில் இருந்தார். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**